**P.R. No. 613** **Date 15.10.2012**

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (15.10.2012) தலைமைச் செயலகத்தில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் 8 கோடியே 71 லட்சம் ரூபாய் செலவில் சென்னை மாநகராட்சியில் பசுல்லா சாலையையும், ரங்கராஜபுரம் சாலையையும் இணைக்கும் ரங்கராஜபுரம் ரயில்வே மேம்பாலத்தை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக திறந்து வைத்தார்கள். மேலும், சென்னை மாநகராட்சியில் 20 கோடியே 91 லட்சத்து 92 ஆயிரம் ரூபாய் செலவில் புதியதாக கட்டப்பட்டுள்ள நவீன தொற்றுநோய் மருத்துவமனை, இறகு பந்து உள்விளையாட்டு அரங்கம், பல்நோக்கு கட்டடம், மின் பரிசோதனைக் கூடம், படிப்பகம் மற்றும் ஓய்வுக் கூடத்தை திறந்து வைத்தார்கள்.

தமிழகத்தில் உள்ள பல்வேறு நெடுஞ்சாலைகளில் வாகனங்கள் பல இடங்களில் ரயில்வே பாதைகளை கடந்து செல்ல வேண்டியுள்ளது. இதனால் வாகனங்கள் ரயில்வே பாதைகளை கடக்க அதிக நேரம் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. இந்தக் கால விரையத்தினை களையும் வகையில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் பல்வேறு முக்கிய இடங்களில் ரயில்வே பாதைகளை கடந்து செல்ல சாலை மேம்பாலங்கள் மற்றும் கீழ் பாலங்கள் கட்டுவதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். அந்த வகையில், பசுல்லா சாலையையும், கோடம்பாக்கம் ரயில்வே சாலையையும் இணைக்கும் ரங்கராஜபுரம் ரயில்வே மேம்பாலத்தின் முதல் பகுதியை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 7.9.2011 அன்று திறந்து வைத்தார்கள்.

அதன் தொடர்ச்சியாக, சென்னை மாநகராட்சியில் 8 கோடியே 71 லட்சம் ரூபாய் செலவில் புதியதாக கட்டப்பட்டுள்ள பசுல்லா சாலையையும், ரங்கராஜபுரம் சாலையையும் இணைக்கும் ரங்கராஜபுரம் ரயில்வே மேம்பாலத்தின் இரண்டாவது பகுதியினை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று காணொலிக் காட்சி மூலமாக திறந்து வைத்தார்கள். இதன் மூலம், வாகனங்களின் பயண நேரம் குறைவதோடு, பொதுமக்கள் அதிக சிரமமின்றி குறைந்த நேரத்தில் தாங்கள் செல்ல வேண்டிய இடங்களுக்கு செல்ல இயலும்.

மேலும், சென்னை மாநகராட்சியின் சார்பில் தண்டையார்பேட்டையில் 19 கோடியே 62 லட்சம் ரூபாய் செலவில் புதியதாக நவீனமயமாக்கப்பட்ட தொற்று நோய் மருத்துவமனை; செனாய் நகரில் 65 லட்சம் ரூபாய் செலவில் புதியதாக கட்டப்பட்டுள்ள இறகு பந்து உள்விளையாட்டு அரங்கம்; உள்ளகரம் – புழுதிவாக்கம் வார்டு அலுவலக வளாகத்தில் 30 லட்சம் ரூபாய் செலவில் புதியதாக கட்டப்பட்டுள்ள பல்நோக்கு மையம்; சிந்தாதிரிப்பேட்டை ரிச்சி தெருவில் 14 லட்சத்து 98 ஆயிரம் ரூபாய் செலவில் புதியதாக கட்டப்பட்டுள்ள மின் பரிசோதனைக் கூடக் கட்டடம்; உள்ளகரம் – புழுதிவாக்கம் இந்து காலனியில் 10 லட்சம் ரூபாய் செலவில் புதியதாக கட்டப்பட்டுள்ள படிப்பகம்; நுங்கம்பாக்கம் ஹேடோஸ் சாலை பூங்காவில் 9 லட்சத்து 94 ஆயிரம் ரூபாய் செலவில் புதியதாக கட்டப்பட்டுள்ள ஓய்வுக் கூடம், என மொத்தம் 20 கோடியே 91 லட்சத்து 92 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கட்டடங்களை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள்.

மேலும், திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் பூசாரி தெருவில் 2 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 36 அலகுகளைக் கொண்ட புதிய துப்புரவுப் பணியாளர்கள் குடியிருப்புக் கட்டடம்; புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி நகராட்சியில் 75 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய அலுவலகக் கட்டடம்; பெரம்பலூர் நகராட்சியில் 85 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய அலுவலகக் கட்டடம், என மொத்தம் 4 கோடியே 10 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய கட்டடங்களை இன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் திறந்து வைத்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர், மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர், மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர், தலைமைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கூடுதல் தலைமைச் செயலாளர், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை மாநகராட்சி ஆணையர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

*******

வெளியீடு : இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9
நாள் : 15.10.2012